தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

## தெற்காசியாவில் காற்று மாசுபாட்டின் பிரச்சனைகளுக்கான ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

## திமுக எம்.பி தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி ?

******

அ) உலகின் மிகவும் மாசுபட்ட நகரங்களுக்கான மையப் பகுதியான தெற்காசியாவில் காற்று மாசுபாட்டின் பிரச்சனைகளுக்கான தீர்வு காண்பதற்கு அண்டை நாடுகளுடன் இணைந்து தற்போதுள்ள அரசு ஏதேனும் ஆலோசனைகளை பகிர்ந்துள்ளதா?

ஆ) ஆம் என்றால் அதன் விவரங்களை அளிக்கவும். இல்லை என்றால் மேற்கூறியவை தொடர்பான திட்டங்கள் ஏதேனும் உள்ளனவா?

இ) முக்கிய இடங்களில் காற்று மாசு கண்காணிப்புகளை நிறுவி, தரவுகளை உருவாக்க காற்று கூடாரம் உள்ளிட்டவை அமைத்து குறைந்த செலவில் தீர்வுகளை பின்பற்ற அண்டை நாடுகளுடன் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளதா?

ஈ) அப்படி இருந்தால், அதன் விவரங்கள் மற்றும், இல்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன?

**டாக்டர்.ராஜ்குமார் ரஞ்சன்சிங் பதில்:**

(அ - ஈ) இந்தியாவின் சுற்றுப்புறத்தில் பிராந்திய அளவில் சார்க் உறுப்பு நாடுகள், 2019 நடைபெற்ற சுற்றுச்சூழலில் ஒத்துழைப்புக்கான மாநாட்டில் கையெழுத்துட்டுள்ளன.

அதேபோல BIMSTEC உறுப்பு நாடுகள் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை ஒத்துழைப்பின் முன்னுரிமை பகுதிகளில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளன

இருதரப்பிலும் பரஸ்பர ஆலோசனைகள் தேவைகள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அண்டை நாடுகளுடன் ஒத்துழைப்பு நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசுக்கட்டுப்பாட்டை தடுப்பது உள்ளிட்ட இயற்கை வளங்களை நிர்வாகிப்பதில் நீண்டகால ஒத்துழைப்பை கருத்தில் கொண்டு, ஜூன் 2021 ஆம் ஆண்டு, பூட்டானுடன், சுற்றுச்சூழல் பாதிப்பு பகுதிகளில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்த்த்தில் இந்தியா கையெழுத்துள்ளது. இந்தியாவின் சுற்றுப்புறத்தில் உள்ள மற்ற நாடுகளுடன், காற்று மாசுபாட்டை எதிர்த்து ஒப்பந்தம் ஏதும் செய்யப்படவில்லை.

******